**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

**DEPOSITION OF WITNESSES**

(Chapter XXIII Cr.P.C)

**CC NO. 141/2022**

**PW. 3**

**Date: 05.06.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. தனபால் | சாதி | |
| கணவர்/தந்தை பெயர் | தனசேகர் | மதம் | |
| கிராமம் | மேலசேரி | தொழில் | |
| வட்டம் | செங்கல்பட்டு | வயது | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **05th June 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

1. நான் பில்டிங்க வேலை செய்கிறேன். 20/03/2019 அன்று நான் என்னுடைய TN21 AY 7837 என்ற Herohonda passion plus என்ற இருசக்கர வாகனத்தில் கோவளம் கடற்கரைக்கு சென்று இருந்தோம். நான் எனது இருசக்கர வாகனத்தை கோவளம் கடற்கரை பார்க்கிங்யில் விட்டு இ,ருந்தேன. மீண்டும் மாலை 6 மணியளவில் வந்து

பார்த்தபோது இருசக்கர வாகனத்தை காணவில்லை. நான் 2 நாட்கள் தேடிபார்த்தும் எனது இருசக்கர வாகனம் கிடைக்கததால் நான் கேளம்பாக்கம் காவல் நிலையத்தில் சம்பவம் சம்பந்தமாக புகார் கொடுத்தேன்.

2. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் (**புகார்**) உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகாா நான் கொடுத்தது தான். **(22/03/2019 தேதியிட்ட புகார் அ.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** ஒரு மாதம் கழித்து என்னுடைய இருசக்கர வாகனம் கிடைத்துள்ளதாக போலிசார் சொன்னதன் பேரில் நான் காவல் நிலையம் சென்று அடையாளம் காண்பித்தேன். எனது இருசக்கர வாகனத்தை திருடியதாக நான்கு பேரை அடையாளம் காண்பித்தார்கள். அதில் இருவர் நீதிமன்றத்தில் உள்ளார்கள். **(2 மற்றும் 3 எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்)** இருசக்கர வாகனத்தை என்னுடைய இடைகால பொறுப்பில் பெற்று கொண்டேன்.

**வழக்கு சொத்து ஆஜர் செய்வதற்காகவும் குறியீடு செய்வதற்காகவும் முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

S/d- K.Nilavarasan, 05.06.2025
Taken down by me in open court read over in the witness in the presence of the accused and admitted by the witness to be correct
**DM cum JM/TPR.**